நமது நகரம், நமது நம்பிக்கைகளாலும் கனவுகளாலும் நிறைந்திருக்கிறது. நீண்டகாலத் திட்டங்கள் அவற்றை நனவாக்க, நம் பகிர்ந்துகொண்ட தோற்றங்களைப் பிரதிபலிக்கும் ஒரு வீட்டை வடிவமைக்க, எதிர்காலத்துக்குத் தயாராக உதவுகின்றன. நமது கனவுகளுக்கான ஒரு பொதுவெளியை தொடர்ந்து கட்டமைப்பது எப்படி?


# நமது கனவுகளுக்கான பொதுவெளி










# நாளைய தினத்துக்காக இன்றே தேர்ந்தெடுங்கள்

நாட்டுக்கும் நகரத்துக்கும் போதிய வீடுகள், பணியிடங்கள், கேளிக்கையிடங்கள், அனைவருக்குமான பொதுவெளி மட்டும் திட்டமிட்டால் போதாது; மின்பகிர்வு, அணைக்கட்டுகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் பல முக்கிய உள்கட்டமைப்புகளையும் தயார்படுத்த வேண்டும்.

முன்பு கருத்தாக்கத் திட்டங்கள் என்று அழைக்கப்பட்ட நீண்டகாலத் திட்டங்கள் என்பவை சிங்கப்பூரின் நிலப்பரப்பின் மாற்றங்களை வரைந்துகாட்டக்கூடிய யுக்திரீதியான நிலப்பயன்பாடும் மற்றும் போக்குவரத்துத் திட்டங்களும் ஆகும். முதல் கருத்தாக்கத் திட்டமானது 1971 ல் தொடங்கியதிலிருந்து செயலூக்கத்துடன் நமது நகரத்தை வடிவமைக்கவும், எதிர்காலத் திட்டத்துக்காகவும் ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கொருமுறை வழக்கமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

நீண்டகாலத் திட்டமிடல் என்பது:

நமது பன்முகத் தேவைகளின் ஒரு சமப்படுத்தப்பட்ட நடவடிக்கை.

---

நமது பௌதீக வரம்புகளைக் கடப்பதற்காக படைப்பூக்கத்துடன் பொதுவெளியை உகந்ததாக மாற்றுதல்.

---

எதிர்பாராத் தேவைகளையும், விருப்பங்களையும் கவனத்தில் கொண்டு எதிர்கால வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

---

அனைவருக்கும் உயிரோட்டமுள்ள அழகான இடங்களை உருவாக்குவதில் இணைந்து செயல்படுதல்.

அடுத்த சில பத்தாண்டுகளில், பல்வேறு பயன்பாடுகளுக்கென “எதிர்கால மேம்பாட்டுப் பகுதிகள்” என அடையாளமிடப்பட்ட பெரிய தொகுதிகளை மேம்படுத்தும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும். "ஒதுக்கப்பட்ட தளங்கள்", “வெண் தளங்கள்” ஆகியவற்றுடன் சேர்த்து இவை மாறிவரும் எதிர்காலத்துக்கு எதிர்வினையாற்றும் நமது திட்டங்களைச் சரிசெய்வதற்கான கூடுதல் இடத்தை நமக்கு வழங்கும்.

நமது நீண்டகாலத் திட்டங்களின் சமீபத்திய மதிப்பீட்டின் ஒரு பகுதியாக, ஜூலை 2021 முதல் ஏப்ரல் 2022 வரையில் விரிவான கலந்துரையாடல் மற்றும் இணையவழி கருத்துக்கணிப்புகள் நடத்தப்பட்டன. இவை 50 அமர்வுகள் மூலம் 15,000 க்கும் மேற்பட்ட அனைத்து தரப்பு மக்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

அடுத்த 50 ஆண்டுகளுக்கும், அதைத் தாண்டியும் தனது தேவைகளுக்கு சிங்கப்பூர் எப்படித் தயாராவது என்பதில் வழிகாட்டக்கூடிய திட்டங்களையும் சாத்தியங்களையும் உருவாக்குவதில் அவர்களின் பார்வைகளை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்.

# வாழுதல்

நன்றாகவும்
ஒன்றாகவும்

சிங்கப்பூரின் உயர்தர வாழ்க்கைச் சூழலின் இதயமாக வீட்டுவசதி உள்ளது. தங்குமிடம் என்ற அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்வதையும் தாண்டி, அது உடைமையாகவும் சொந்தமாகவும் சிங்கப்பூர்வாசிகளிடையே வலுவான உணர்வைக் கொண்டுள்ளது. நமது மக்கள்தொகை அதிகரிக்கும்போது, குடும்பத்தினரின் பன்முகத்தன்மையும் அதிகரிக்கிறது. இந்த மாற்றங்களை ஏற்கும்படி நமது வாழ்க்கைச் சூழலை தொடர்ந்து மாற்றி வருகிறோம்.









## 1

## புதிய தேவைகளுக்கும் மற்றும் ஆசைகளுக்கும் மேலும் வீடுகள்

அனைவரையும் உள்ளடக்கிய, பெறக்கூடிய வீடுகளை வழங்குவது சிங்கப்பூர் வீட்டுவசதித் துறையின் இலக்குகளின் மையமாக தொடர்ந்து இருந்து வருகிறது. நாங்கள் செய்யவிருப்பது:

நமது இயற்கை மற்றும் பண்பாட்டுச் சொத்துக்களை உணர்வுப்பூர்வமாக உள்ளடக்கிய புதிய ஊர்களை உருவாக்குதல்.

நகரத்துக்குள்ளும் அதைச் சுற்றிலும் முக்கிய வசதிகளுக்கு நெருக்கமாகவும் கூடுதல் வீடுகளுக்கான திட்டம்.

பலதரப்பட்ட குடும்பங்களுக்கு ஏற்றபடி பன்முக வீட்டுவசதி வகைகளை வழங்குதல்.

## 2

## உள்ளடக்கியதும் மற்றும் நெருக்கமாக அமைந்ததுமான ஊர்கள்

நமது ஊர்கள் குடியிருப்பாளர்களிடையே சொந்த உணர்வை உருவாக்கவும் துடிப்பான சமூகங்களை வளர்க்கவும் உதவும். நாங்கள் செய்யவிருப்பது:

அனைத்துச் சமூகத்திலுமுள்ள குடியிருப்பாளர்களிடையே மேலும் ஒட்டுறவை ஏற்படுத்த உதவுவதற்காக தனியார் மற்றும் பொது வீட்டு வசதியின் சிறப்பான கலவையை நோக்கிப் பணியாற்றுதல்.

குடியிருப்பாளர்களின் வெவ்வேறு வாழ்க்கை நிலைகளில் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்விற்கு உதவக்கூடிய ஊர்களைத் திட்டமிடுதல்.

சமூக ஒட்டுறவையும், பிணைப்பையும் ஊக்கப்படுத்துவதற்கு நடக்கத்தக்க தெருக்களையும் சமூக வெளியையும் உருவாக்குதல்.


## 3

## எதிர்காலத்துக்குத் தயாராகவுள்ள ஊர்கள்

குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத்தரம் முன்னேறிவருகையில், ஊர்கள் — இப்போதிருப்பவையும் வரவிருப்பவையும் — அவற்றை ஏற்பதாக இருக்கவேண்டும். நாங்கள் செய்யவிருப்பது:

புதிய அல்லது எதிர்பாராத் தேவைகளைப் பூர்த்திசெய்ய மேலும் ஏற்கத்தக்கதும், நெகிழ்வானதுமான வெளிகளை வழங்குதல்.

பழைய ஊர்கள் குடியிருப்பாளர்களின் இன்றைய மற்றும் எதிர்காலத் தலைமுறைகளுக்கு தொடர்ந்து பயன்படுவதை உறுதிசெய்ய அவற்றைப் புதுப்பித்தல்.



# வேலை

எங்கு வேண்டுமானாலும்,
எல்லா இடத்திலும்

உலகப் பொருளாதாரம் புதிதாகவும், எதிர்பாரா வழிகளிலும் மாறிவருவதால், நமது மக்களுக்கு தரமான வேலைகளை உறுதி செய்ய, தொழில்களுக்கு கவர்ச்சியான, சிக்கனமான இடங்களை சிங்கப்பூர் கைக்கொள்ளவும் வழங்கவும் வேண்டும். புதிய தொழில் மாதிரிகள் மற்றும் மேலும் நெகிழ்வான வேலை ஏற்பாடுகள் போன்ற மாறிவரும் தேவைகளுடன் மரபார்ந்த பணியிடங்களும் வேலைகளும் உருவாகி வருகின்றன. வேலை செய்தல் இனி வெறுமனே அலுவலகத்துடன் மட்டும் அடங்கி இருக்காது. எதிர்காலத்தில் தொழிற்சாலைகளில்கூட அப்படி இருக்காது.











## 1



## கவர்ச்சியான பணி முனையங்கள்

நமது பொருளாதாரம் அனைவருக்குமான பலதரப்பட்ட வேலைகளையும், பணியிடங்களையும் தாங்கவும் மற்றும் ஆதரிக்கவும் கூடிய ஒன்று. நாங்கள் செய்யவிருப்பது:

**பலதரப்பட்ட வசதிகள், பொழுதுபோக்கு மற்றும் வாழ்க்கைத்தரத்துக்கான வழங்கல்கள், அதேபோல கூடுதல் குடியிருப்புத் தேர்வுகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி உலகளாவிய தொழில் மையமாக நமது சமூக மையத்தினை மேலும் கலவையான பயன்பாடாகவும், துடிப்பான வளாகமாகவும் மாற்றும்வேளையில் அதன் கவர்ச்சியை தொடர்ந்து மேம்படுத்துகிறோம்.**


---

**வீடுகளுக்கு அருகில் துடிப்பான பணியிடங்களை உருவாக்குவதற்கு நகர மையத்துக்கு வெளியே கூடுதல் பணி முனையங்களை அறிமுகப்படுத்துதல்.**

---

**சிறப்பான ஒருங்கியக்கத்தை உருவாக்குவதற்கு தொழில்களையும், ஆராய்ச்சி மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளையும் உள்கட்டுமானங்களையும் ஒன்றாகக் கொண்டுவருவதன் மூலம் சுறுசுறுப்பான பொருளாதாரச் சூழலமைப்பை உருவாக்குதல்.**

## 2



## புதுமை மற்றும் புதிய தேவைகளுக்கான நெகிழ்வான வெளிகள்

சிங்கப்பூர் தனது போட்டித்திறனைப் பேணுவதற்காக நமது பணியிடங்கள் தொடர்ந்து தகவமைப்பதாக இருக்கவேண்டும். நாங்கள் செய்யவிருப்பது:

**புதிய கருத்தாக்கங்களை புதிய பயன்பாட்டுக் கலவைகளுடன் ஒரே இடத்தில் சோதிப்பதற்கான சிறப்பான நெகிழ்வுதன்மையுள்ள தொழில்துறையை வழங்குவதற்கு, தொழில்-வெண் மண்டலங்களுக்கான பொருத்தமான இடங்களைத் தேடுதல்.**

---


**தனிப்பட்ட கட்டிடங்களையும் தாண்டி மாவட்டமெங்கும் பல்வேறு பயன்பாடுகளுக்காக திட்டமிடுதலில், நெகிழ்வுதன்மையை வழங்கக்கூடிய தொழில்முனைவு மாவட்டங்களை உருவாக்குதல்.**

---

**தேர்ந்தெடுத்த பகுதிகளில் புதிய பயன்பாடுகளைச் சோதிக்கவும், பொருளாதாரத்தின் விரைவாக மாறிவரும் தேவைகளை ஆதரிக்கவும், புத்தாக்கத்துக்கு உதவும் வகையில் பல்வேறு குத்தகை காலங்கள் வழங்குதல்.**

## 3

## எதிர்காலத்துக்குத் தயாராக உள்ள பொருளாதாரம்



தொழில் மாதிரிகளும், தொழில்நுட்பப் போக்குகளும் நமது பணியாளர்களின் நாட்டங்களும் உருமாறிவருகையில், நமது பணியிடங்களும் மாறவேண்டியுள்ளது. நாங்கள் செய்யவிருப்பது:

**பலதரப்பட்ட பணிகளையும் பணியிடங்களையும் அதிக மதிப்புள்ள தொழில்துறைகள் மற்றும் புதிய போக்குகளைக் கைக்கொள்வதன் மூலம் வழங்குதல்.**

---

**வளர்ந்துவரும் துறைகளுக்கு கூடுதல் இடத்தை தருவதற்காக பணியிடங்களுக்கான இடத்தை உகந்ததாக்குதல்.**



# விளையாட்டு

ஆரோக்கியமும் மகிழ்ச்சியும்

விளையாட்டு இடங்கள் நாம் சமூகத்தை கட்டியெழுப்பவும், உறவுகளை வலுப்படுத்தவும், நகரத்தில் நமது அன்றாட வாழ்வில் மகிழ்ச்சியான தருணங்களைக் காணும் இடமாகும். ஓய்வுநேரத்துக்கும், கேளிக்கைக்குமான இடங்கள் நமது நகரச் சூழலில் மேலும் ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடுவதாகவும் நாம் செயலூக்கத்துடன் இருக்கவும், நமது வாழ்க்கையை மேம்படுத்தவும் செய்கின்றன. நமது விளையாட்டு வழங்கல்களைப் பன்முகப்படுத்துவதும் நிறைய மக்களுக்கு அதைக் கிடைக்கச் செய்வதனாலும், நமக்கும் உலகெங்கிலுமிருந்து வருவோருக்கும் சிங்கப்பூர் உயிர்ப்பானதும் ஈர்க்கக்கூடிய நகரமாகவும் தொடர்ந்து இருக்கும்.











1

## வீடுகளுக்கு அருகே கூடுதல் கேளிக்கை



நமது ஊர்களில் நன்கு இணைக்கப்பட்ட கேளிக்கை வசதிகளின் வலைத்தொடர்பு இருப்பது நாம் அனைவரும் தளர்வாக ஓய்வெடுப்பதை உறுதிசெய்கிறது. நாங்கள் செய்யவிருப்பது:

**நிலப் பயன்பாட்டில் விருப்பத்தேர்வுகளை அதிகரிக்கவும், உகந்ததாக்கவும், ஒரேயிடத்தில் பல்வேறு கேளிக்கை வசதிகளின் ஒருங்கிணைப்பை ஆதரித்தல்.**

---

**குடியிருப்போருடன் விளையாட்டு வெளிகளை இணைந்து உருவாக்குதல்.**

---

**வெவ்வேறு வகையான பச்சை வெளிகளை அறிமுகப்படுத்தி, நகர வாழ்க்கையில், இளைப்பாறுதலைக் கொண்டுவரவும், சமூகப் பிணைப்பை வளர்க்கவும் செய்தல்.**

2

## பச்சை, நீலம் மற்றும் கேளிக்கைக்காக ஒரு தீவு



நமது செழுமையான பல்வகை பச்சை, நீல வெளிகளை கூடுதலான மக்கள் அனுபவிக்கவும் மெச்சவும் செய்யலாம். நாங்கள் செய்யவிருப்பது:

**எங்கள் இயற்கை அடிப்படையிலான கேளிக்கை வலைத்தொடர்பை விரிவுபடுத்தவும் நமது அணைக்கட்டுகளையும் நீர்வழிகளையும் செயல்படுத்தி மேலும் ஓய்வுநேர, கேளிக்கை வாய்ப்புகளை வழங்குதல்.**

---

**நமது தீவைத் தழுவி, நமது கடற்கரைகள் மற்றும் கடல் தீவுகளில் அதிக பொழுதுபோக்கு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராய்வது.**



3

## அனைவருக்குமான விளையாட்டு நிறைந்த நகரம்



சுற்றுலாத்துறை சிங்கப்பூரின் நிலையை உலகளவில் உயிர்ப்பான நகரமாக வலுப்படுத்துகிறது; உள்நாட்டு அனுபவங்களைச் செறிவூட்டுகிறது; நமது தேசத்தின் கதைக்கு உரமூட்டுகிறது. நாங்கள் செய்யவிருப்பது:

**சிங்கப்பூர் பலருக்கும் விரும்பக்கூடிய இடமாக இருப்பதை உறுதிப்படுத்த புதிய சுவாரசியமான ஈர்க்கும் அம்சங்களை வரவேற்பது.**

---

**புதுமையான ஓய்வுநேர மற்றும் வாழ்க்கைத்தர அனுபவங்களை வழங்குவதற்கு இருக்கக்கூடிய ஈர்க்கும் அம்சங்களையும் இடங்களையும் மாற்றியமைக்க உதவுதல்.**

---

**நகரெங்கிலும் பொதுவெளிகளில் கேளிக்கை தருணங்களையும் மகிழ்ச்சியையும் உருவாக்குவதற்கு மக்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல்.**

# நகர்வு

திறனுடையதும் இணைக்கப்பட்டதும்

மக்களும் பொருட்களும் நகரங்களுக்குள் நகரும் விதமும், உலகத்துடன் நாம் எப்படித் தொடர்புகொள்கிறோம் என்பதும் புதிய நகர்வுத் தொழில்நுட்பங்களுடனும் புதுமைகளுடனும் மாற்றமடையும். நமது நகருக்குள் இயக்கத்தை வசதியானதாக ஆக்குவதிலும், நமது இடநகர்வு வலைத்தொடர்புகளை வலுப்படுத்துவதும், மேலும் நீடித்த திறன்மிக்க பயண முறைகளை நோக்கி மாறுவதன் மூலம் நகருக்குள்ளும், உலகத்துடனும் விரைவானதும் எளியதுமான தொடர்புகளை வளர்த்தெடுப்பதில் நமது தொடர்ந்த கவனம் இருக்கும்.










1

## ஒரு முழுமையான இடப்பெயர்வு வலைத்தொடர்பு



சிங்கப்பூரைச் சுற்றி வருவது மேலும் வசதியானதாகவும் நீடித்ததாகவும் மாறியுள்ளது. நாங்கள் செய்யவிருப்பது:


பொது போக்குவரத்து மற்றும் செயலாக்க விருப்பங்களுக்கு முன்னுரிமை.

சாலைகளில் நடப்பதையும், மிதிவண்டியில் செல்வதையும் பொதுப் போக்குவரத்தில் பயணிப்பதையும் மேலும் கவர்ச்சிகரமானதாக மாற்றுதல்.

நாம் இடம்பெயரும் வழிகளை மேம்படுத்தக்கூடிய புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

2

## சிறப்பான மேலும் திறன்மிக்க பட்டுவாடா




நமது ஊர்கள் அதிகரித்துவரும் இணையவணிகப் பொருள் பட்டுவாடாக்களை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். நாங்கள் செய்யவிருப்பது:

சரக்குப் போக்குவரத்து இயக்கங்களை ஆதரிப்பதன் மூலம் குறைவான வளங்களைக் கொண்டு அதிகளவில் பட்டுவாடாக்களை மேற்கொள்ள முடியும்.

குறைந்ததூர பட்டுவாடாக்களை சிறப்பாகச் செயல்படுத்த உள்கட்டமைப்பைத் திட்டமிடுதலும் தொழில்நுட்பங்களைக் கைக்கொள்ளுதலும்.

3


## நன்கு இணைக்கப்பட்ட உலகளாவிய மையம்



திறந்த பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு சிறிய நாடாக, ஏனைய பிற நாடுகளுடன் இணைதொடர்புகொள்ளும் திறனே சிங்கப்பூரின் போட்டித்தன்மையின் மையமாக உள்ளது. நாங்கள் செய்யவிருப்பது:

நமது வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி இணைப்புகளை புதிய கட்டுமானங்கள் மூலமும் சிறந்த தொழில் ஒருங்கிணைப்புடனும் மேம்படுத்துதல்.

உலகளாவிய மின்னணு மையமாக நமது நிலையை உலகத்துடனான வலுவான மின்னணு இணைப்புகள் வாயிலாக மேம்படுத்துதல்.



# சிந்தையில்

தனித்துவமும் அழகும்

நமது நகரம் முதிர்ச்சியடைகையில், நமது இன்றைய, நாளைய தலைமுறைகள் இதைத் தனது பிறந்த இடமாகச் சொல்வதில் தொடர்ந்து பெருமைகொள்வதாக இருக்க வேண்டும். பரிச்சயமான இடங்கள், தனித்துவமான கட்டிடங்கள் மற்றும் நமது கட்டப்பட்ட பண்பாட்டு அடையாளம் நமக்குச் சொந்த உணர்வை அளித்து இந்த நகரத்தைத் தனித்துவமானதாக ஆக்க வேண்டும். சிங்கப்பூரினை உள்ளடக்கியதாகவும் ஈடுபடுத்தக்கூடியதாகவும் வைத்திருப்பதில் நாம் இணைந்து பணியாற்றுவோம். இதனால் நமது கனவுகளைப் பின்தொடரவும் இங்கேயே வளர்ந்து முதியவர்களாக ஆவதற்கும் சிறந்த இடமாகவும் இருக்கும்.





Photo: STB



1

## அனைவருக்குமான அழகான நகரம்



நமது பாரம்பரியமும் அடையாளமும் இன்றைய தலைமுறைக்கும் நாளைய தலைமுறைக்கும் இந்த நகரம் மென்மேலும் வளரும்போதும் அவர்கள் போற்றக்கூடிய ஒன்றாக உயிர்ப்புடன் இருக்கும். நாங்கள் செய்யவிருப்பது:

**நாம் மேம்பாடு அடையும்போதும் பரிச்சயமான இடங்களை அடையாளம் கண்டு, பாதுகாத்து, நமது பாரம்பரியச் சொத்துக்களைத் தக்கவைத்துக் கொள்வதன் மூலமும் குணாதிசயத்தையும் இட அடையாளங்களை மேம்படுத்தும் வழிகளை ஆராய்வதன் மூலமும் தக்கவைத்துக் கொள்வது.**

**உணர்ச்சிகரமான ஒருங்கிணைப்பு மற்றும் நமது கட்டமைக்கப்பட்ட பண்பாட்டைத் திரும்பப் பயன்படுத்துவது வாயிலாக அனைவரின் மனதுக்கும் நெருக்கமானதாக சிங்கப்பூரினை ஆக்குவதற்காக புதிய மற்றும் பழையவற்றை ஒன்று கலப்பது.**

**பௌதீகமானதும் அரூபமானதுமான பண்பாட்டு அம்சங்களைக் கொண்டாடுவதும் அவற்றைத் தக்கவைத்துக் கொள்வதும், அத்துடன் நமது இடங்களுக்கு அர்த்தத்தை அளிக்கக்கூடிய நினைவுகளையும் கதைகளையும் பகிர்வதைப் போற்றுதல்.**

2

## தனித்துவமானதும் நேசத்துக்குரியதுமான இடங்கள்



நகரத்தில் நமக்குப் பிடித்தமான இடங்கள் பெரும்பாலும் நகர்ப்புற வடிவமைப்பு மற்றும் கட்டிடக்கலையில் கருதப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகளின் விளைவாகும். நாங்கள் செய்யவிருப்பது:

**சொந்த உணர்வை உருவாக்குவதற்காக உணர்வுப்பூர்வமான நகர வடிவமைப்பு மற்றும் புதுமையான கட்டடக்கலை வாயிலாக நினைவில் நிற்கத்தக்க இடங்களையும் தனித்துவமான கட்டிடங்களையும் உருவாக்குதல்.**

**மக்கள் கூடி, பழக, அல்லது ஓய்வெடுத்து நகரத்தை ரசிக்க கூடுதல் இடங்களைத் திறப்பது.**

3


## சமூகத்துக்கான இடங்கள்




சொந்த உணர்வை வளர்த்தெடுப்பது என்பது ஒரு இடத்தின் அடையாளத்தை ஸ்தாபிக்கவும் அதன் மதிப்பை விரிவாக்கவும் முக்கியமானது. நாங்கள் செய்யவிருப்பது:

**சிறப்பான சொந்த உணர்வினை உணரச் செய்யவும் மேலும் உயிர்ப்பான இடங்களை உருவாக்கவும் முழுமையாகவே உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து இடங்களை உருவாக்குவது.**

**நமது கட்டமைக்கப்பட்ட பாரம்பரியத்தின் கதைகளைச் சொல்வதில் அதிகமான மக்கள் பங்கேற்கும் வகையில் பொதுமக்களை ஈடுபடுத்துதல்.**






# மேற்பார்வை

பச்சையும் நீலமும்

உயிரோட்டமான நெகிழ்தன்மையுள்ள நகரத்தில் குறிப்பாக நகரமயமாக்கல் மற்றும் பருவநிலை மாற்றத்தின் தாக்கத்துக்கு எதிராக இயற்கை முக்கியப் பங்கினை வகிக்கிறது. பச்சை மற்றும் நீல வெளிகள் இயற்கையான சூழலமைப்பை ஆதரிக்கவும் நமது ஆரோக்கிய, நல்வாழ்விற்கு பலனளிக்கவும் செய்கின்றன. சமூகங்களுடன் தொடர்ந்து பணியாற்றி சிங்கப்பூரினை இயற்கைக்குள் இருக்கும் நகரமாக உருமாற்றுவோம்.









1

## இயற்கையான மூலதனப் பராமரிப்பு




நமது நகரக் கட்டுமானத்துக்குள் அறிவியல் அணுகுமுறை வழிகாட்டுதலின்படி நமது பச்சை மற்றும் நீல இடங்கள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்படும்.

சூழலியல் விவரக்குறிப்புக் கருவிகளைப் உருவாக்கி மற்றும் நீண்டகாலத் திட்டங்களில் இயற்கையை ஒருங்கிணைக்க சுற்றுச்சூழல் விவரக்குறிப்பு பயிற்சியை (EPE) மேற்கொண்டுள்ளோம்.

நீண்ட கால சூழலியல் பின்னடைவை உறுதி செய்வதற்காக, இயற்கை பூங்கா வலைத்தொடர்புகள் மற்றும் இயற்கை தாழ்வாரங்களுடன் நமது இயற்கை மூலதனத்தை விரிவுபடுத்துவோம்.

2

## பல்செயல் தன்மையுள்ள பச்சை, நீல இடங்கள்



நமது நகரச் சூழலுடன் நமது பச்சை மற்றும் நீல வெளிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் சூழலியல் இணையும் தன்மையை மேம்படுத்தவும், உயிர்ச்சூழலை மேம்படுத்தவும் சமூக கேளிக்கைத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் முடியும். நாங்கள் செய்யவிருப்பது:

நமது இயற்கையான வசிப்பிடங்களை ஆதரிக்கக்கூடியதும் ஓய்வுநேர வெளிகளாகப் பயன்படக்கூடியதுமான வெளிகளை உருவாக்குதல்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நகர்ப்புற வெப்பத்தைத் தணிக்கவும், பல்லுயிர் பெருக்கத்திற்கான மாற்று வாழ்விடங்களை வழங்கவும் இயற்கையை நமது நகர்ப்புற நிலப்பரப்பில் மீட்டெடுத்தல்.

மேலும் உணர்வுப்புர்வமாக எப்படி மேம்பாடு அடைவது என்பதை ஆய்வதன் மூலம் மேம்பாட்டுத் தேவைகளை இயற்கையைக் காப்பதுடன் சமப்படுத்துதல்.

3


## இயற்கை வாயிலாக பருவநிலை நெகிழ்தன்மை



கேளிக்கை மற்றும் சூழலியல் பலன்களை வழங்கும் அதேவேளையில் பச்சை மற்றும் நீல வெளிகளால் பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தைத் தணிக்கமுடியும். நாங்கள் செய்யவிருப்பது:

கட்டடங்கள் உள்ள பகுதிகளில் பசுமையை தீவிரப்படுத்துவதன் மூலம் மேற்பரப்பிலும் சுற்றுப்புறங்களிலும் சீதோஷ்ணத்தைக் குறைத்தல்.

பல்லுயிர் தன்மையை மேம்படுத்தும் அதேவேளையில் நமது பருவநிலை நெகிழ்தன்மையை மேம்படுத்துவதற்கு பொருந்துமிடத்தில் பொறியியல் தீர்வுகளை இயற்கைக் கூறுகளுடன் இணைப்பது.



# தக்கவைத்தல்


குறைவான கார்பனும்
மற்றும் மீள்திறனும்

முழுமையான சமச்சீர் பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் அக்கறைகளின் மூலமும் நமது வரம்புக்குட்பட்ட நிலப்பரப்பு மற்றும் கடல் வெளியைக் காரணிகளாகக் கொண்டும் சிங்கப்பூரினை நீடித்திருக்கும் வடிவில் உருவாக்கியுள்ளோம். நமது நீண்டகால நீடிப்புத்தன்மையை உறுதிப்படுத்துவது பருவநிலை மாற்றம் மற்றும் வளப் பற்றாக்குறை ஆகியவற்றுடன் மேலும் முக்கியமானதாக உள்ளது. தற்போதைய தேவைகளை எதிர்காலத் தலைமுறைகளின் தேவைகளுடன் சமரசம் செய்யாமல் பூர்த்தி செய்வதை உறுதிசெய்வதற்கு நாம் அனைவரும் நமது பங்களிப்பைச் செய்ய வேண்டும்.




1

## குறைவான கார்பன் கொண்ட நகரம்



இந்நூற்றாண்டின் பாதிக்குள் சிங்கப்பூர் பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு என்ற சாதனையை எட்டும். நாங்கள் செய்யவிருப்பது:

தூய்மையான ஆற்றல் வழங்கள் மற்றும் சிறந்த கட்டடங்கள் மூலம் நகரம் இயங்கும் வகையில் நமது எரிசக்தி விநியோகத்தை கார்பன் நீக்கம் செய்து பல்வகைப்படுத்துவது.


சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதத்தை குறைக்கும் மற்றும் அதை குணப்படுத்தும் மற்றும் புத்துயிர் அளிக்கும் ஒரு மீளுருவாக்கம் கட்டமைக்கப்பட்ட சூழலை நோக்கி நகர்தல்.

முடிந்தவரை மீட்டெடுத்தல் மற்றும் மறுபயன்பாடு செய்வதன் மூலம் நமது ஆதார சுழல்களை மூடவும், இது நாம் உருவாக்கும் கழிவுகளைக் குறைக்க முடியும்.




2

## கூடுதல் பருவநிலை-மீள்திறன் உள்கட்டமைப்பு



பருவநிலை மாற்றத்தின் தாக்கம் மற்றும் விளைவுகளிலிருந்து நமது நகரத்தை நன்கு பாதுகாக்க முடியும். நாங்கள் செய்யவிருப்பது:

நிலத்தை உகந்ததாக ஆக்குவதற்காக பல்செயல்திறனுள்ள புதிய உள்கட்டமைப்புகள் மூலம் வெள்ளத்தைத் தாங்கும் திறனை மேம்படுத்துதல்.

சிறப்பான சீதோஷ்ணத்தை ஆதரிக்கக்கூடிய வகையில் திட்டமிடுதல், கட்டிடங்களையும் சுற்றுச்சூழலையும் வடிவமைத்தல் மூலம் நகர வெப்பத்தைக் குளிர்விப்பது.




3

## அமைப்புகள் மட்டத்தில் திட்டமிடல் அணுகுமுறை



மூலவள வளையங்களை மூடுவதால் கழிவுகளைக் குறைக்கமுடியும். அதேசமயம் செயல்திறனை அதிகரிக்கவும், செலவை மிச்சப்படுத்தவும் சுற்றுச்சூழல் பலன்களையும் பெறமுடியும். நாங்கள் செய்யவிருப்பது:

நமது அரிய மூலவளங்களின் பயன்பாட்டை நீட்டிப்பதற்கு நகர அமைப்பின் வெவ்வேறு பகுதிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் உள்கட்டமைப்பை அடையாளம் காணுதல்.


உற்பத்தி நடைமுறையில் மூலவள வளையங்களை மூடுவதற்கு யுக்திரீதியாக தொழில்துறை இடமமைத்தல் மூலம் சுற்றுச்சூழல் பொருளாதாரங்களை ஆதரித்தல்.

வரவிருக்கும் ஜூராங் ஏரி வட்டாரத்தில் நாம் பார்ப்பதைப் போல தொடக்கத்திலிருந்தே நீடிக்கத்தக்க புதிய மாவட்டங்களை உருவாக்குதல்.




4

## நிலம் மற்றும் பொதுவெளி தேர்வுகள்



எதிர்காலத் தலைமுறைக்கு இடமின்றிப் போகாமலிருப்பதை உறுதிசெய்வதற்காக நாம் தொடர்ந்து நமது நிலம் மற்றும் பொதுவெளி தேர்வுகளை உகந்ததாக்கும் வழிகளைக் கண்டறிந்து வருகிறோம். நாங்கள் செய்யவிருப்பது:

கடல்சார் சூழலைப் பாதிக்காதபடி, பயன்பாடுகளுக்கான இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் தொழில்நுட்பத்தைக் கட்டுப்படுத்துதல் மூலம் கடல்வெளியை உகந்ததாக்குதல்.

படைப்பூக்கமுள்ள புதுமையான தீர்வுகளை நில உருவாக்கத்துக்குத் தேடுவதன் மூலம் நில இயல்பை மீட்டமைக்கும் மரபான முறைகளையும் தாண்டித் தேடுதல்.

கூடுதலாகக் கீழறை வெளிகளை உருவாக்குவதில் அதன் சாத்தியங்களை அறிவதன்மூலம் நமது நிலத்தடி வெளியை விடுவித்தல்.

# பயா லெபார் விமானத்தளம்

அடுத்த விமானம்

2030கள் முதல், பயா லெபார் விமானத்தளம் (PLAB) சிங்கப்பூரின் கிழக்கில் புதிய தலைமுறைக்கான வழியை உருவாக்குவதற்காக இடமாற்றம் செய்யப்படும். எதிர்காலச் சமூகமாக PLAB மறுஉருவாக்கத்துக்கான ஆரம்பகட்ட கருத்தாக்க யோசனைகளைத் தருவதற்காக Singapore Institute of Architects (SIA) மற்றும் Singapore Institute of Planners (SIP) ஆகியவற்றை URA அழைத்துள்ளது. பயனுள்ள யோசனைகள் விரிவாக ஆய்வுசெய்யப்பட்டு அவை PLAB-ன் எதிர்கால பிரதான திட்டத்துடன் ஒருங்கிணைந்து செல்கிறதா என்று பார்க்கப்படும்.







1

## புதுமையும் செயலாக்கமும் உள்ள சமூகம்; பன்முகத்தன்மையும் படைப்பூக்கமும் உள்ள வேலைகளும் மற்றும் இடங்களும்

நம்மிடமுள்ள தற்போதைய பாலிசென்ட்ரிக் மாதிரியை உருவாக்குவதன் மூலம், PLAB ஆனது, வேலைவாய்ப்பை வீடுகளுக்கு நெருக்கமாகக் கொண்டுவருவதற்கான ஒரு தனித்துவமான வேலை முனையாக மாறும். குறிப்பாக PLAB மூலம் நாம் திட்டமிடக்கூடியவை:

நேரடி இணைப்புகளை வழங்குதல், சுற்றியுள்ள சமூகங்களுக்கும் அருகிலுள்ள ஊர்களுக்கும் PLAB மூலம் இணைப்பதும் பயண நேரங்களைக் குறைப்பதும்.

---

மக்களை மையமாகக் கொண்ட இடப்பெயர்வு வலைத்தொடர்பு மற்றும் நல்வாழ்வு மற்றும் உயர்தர வாழ்க்கைத் தரத்திற்கு பங்களிக்கும் பகிரப்பட்ட இடங்களைப் பயன்படுத்துவதன் மூலம் எளிதான மற்றும் திறமையான இயக்கத்தை உறுதி செய்தல்.

---

சிறப்பான நெகிழ்வுதன்மையையும் பலவகைகளையும் வழங்கக்கூடிய உயிர்ப்பான பணியிடங்களை படைப்பூக்கத்துடன் ஒருங்கிணைப்பதன் மூலம் விவேகமானதும் நெகிழ்வானதும் பன்முகத்தன்மையுள்ள பணியிடங்களையும் கிடைக்கச் செய்தல்.

2

## சிநேகமும் தனித்துவமும் உள்ள சமூகம்; வாழத்தக்க உள்ளடக்கிய சுற்றுச்சூழல்

PLAB, சிங்கப்பூரின் எதிர்கால வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், வேறுபட்ட குணாதிசயங்கள் மற்றும் தனித்துவமான அடையாளங்களைக் கொண்ட மாவட்டங்களை உருவாக்குவதற்கும், மேலும் அதன் குடிமக்களிடையேயும் உரிமை மற்றும் சொந்தம் என்ற வலுவான உணர்வுக்கு பங்களிக்கும். நாங்கள் செய்யவிருப்பது:

தனித்துவமான மாவட்டங்கள் PLAB-ன் பாரம்பரியத்தின்படி கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் பிரத்யேக தள அம்சங்கள்.

---

சமூகப் பிணைப்பையும் தாங்கும் தன்மையையும் வளர்க்கும் மற்றும் வலுப்படுத்தவும் கூடிய தன்னிறைவான சமூகமைய சுற்றுப்புறங்களையும் உருவாக்குதல்.

---

நெகிழ்வான இடங்களுக்குத் திட்டமிடுதல் என்பது காலப்போக்கில் மாறிவரும் தேவைகளுக்கேற்ப கைக்கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

3

## நீடித்ததன்மையும் விளையாட்டுத்தனமான சமூகமும்; பச்சையும் நீலமும் கிழக்கின் இதயம்

பருவநிலை மாற்றெளம் மற்றும் மூலவளப் பற்றாக்குறை சவால்களை நிவர்த்திப்பதற்காக PLAB உருவாக்கப்படும். நாங்கள் ஆராய்வோம்:

பல்லுயிர் பெருக்கம், பொழுதுபோக்கு மற்றும் காலநிலை மீள்தன்மை ஆகியவற்றை ஆதரிக்க, நகரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை பச்சை மற்றும் நீல வலைத்தொடர்பினால் ஒன்றாகத் தைத்தல்.

---

சுற்றுச்சூழல் பொருளாதாரம் மற்றும் மூடிய வளைய அமைப்புகளைச் செயல்படுத்தி ஊரின் நீடித்ததன்மைக்கு சக்தியளிப்பதற்காக புதுப்பிக்கத்தக்க வளங்களில் இருந்து பாதி அல்லது அதற்குமேற்பட்ட அதன் மின் தேவைகளை நிறைவேற்றுதல்.